

# மகளிர் திட்டம்





## வீடு தோறும் காய்கறித் தோட்டம்



# மகளிர் திட்டம் -

# வீடுதோறும் காய்கறித் தோட்டம்

*வெளியிடுபவர் :*

இயக்குநர்,
செய்தி—மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

சிறப்பு வெளியீடு எண் : 33

'தமிழரசு' இலவச வெளியீடு

மே 2000

*வெளியிடுபவர் :*

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

திருமதி எஸ்.பி.சற்குணபாண்டியன்
சமூக நலத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009
தொலைபேசி : 5384020

நாள் : 12-5-2000

# மகளிர் சுயஉதவிக்குழுக்கள் - வீட்டுத்தோட்டம்

*'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே'* என்பதை வலியுறுத்தி **தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா,** மகாகவி பாரதியார், **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** ஆகியோர் மகளிர் விழிப்புணர்வு குறித்துக் கண்ட கனவுகளை நனவாக்கிடும் வகையில், பல்வேறு வழிகாட்டும் புரட்சித் திட்டங்கள் மாண்புமிகு **முதல்வர் கலைஞர்** அவர்களால் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இல்லத்தில் ஆற்றும் பணி போக, வேளாண் பணிக்காலங்களில் ஆற்றிய விவசாயப் பணிகள் போக, எஞ்சிய காலத்தை தக்க வழியில் பயன்படுத்தி, சமூகப் பயனுள்ள வகையிலும், சொந்த வருமானத்தைப் பெருக்கும் வகையிலும், 'வாழ்ந்து காட்டுவோம்' என்னும் வழிகாட்டும் பெண்கள் திட்டம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் பொருளாதாரத் தேவைகளை அவர்களே பூர்த்தி செய்து கொள்ளும் வண்ணம் 26,000க்கும் மேற்பட்ட 'சுயஉதவிக் குழுக்கள்' உருவாக்கப்பட்டு. அவற்றில் சுமார் 5,00,000 மகளிர் அங்கம் வகிக்கின்றனர். கிராமத்து மகளிர் சொந்தக் காலில் நின்று தங்கள் குடும்ப மேம்பாட்டிற்கு தங்கள் பங்களிப்பைச் செலுத்தும் வண்ணம் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்படும் இந்த திட்டங்களால் குடும்ப பாரத்தைச் சுமப்பது ஆண்களின் தோள்கள் மட்டுமல்ல, பெண்களின் தோள்களும் கூடத்தான் என்கின்ற புரட்சி வரலாற்றை உருவாக்கியிருக்கிறார் மாண்புமிகு **தமிழக முதலமைச்சர் கலைஞர்** அவர்கள்.

குடும்பத் தலைவிகளான மகளிர், நல்ல உடல் நலத்துடன் திகழ்வதோடு, குடும்ப உறுப்பினர்களின் உடல்நலங்களையும் பேணிடும் வகையில், சத்தான உணவு உண்ணும் பழக்கத்திற்கு, பசுங்காய்கறிகளின் தேவை என்பது அவசியமாகிறது. இத்தேவையினைத் தாங்களே நிறைவு செய்துகொள்ளும் வகையில், தங்கள் இல்லங்களின் புறக்கடைகளில் உள்ள காலி இடங்களில், வீட்டுத்தோட்டம் அமைத்திட, கிராமப்புற மகளிர் அதிலும் குறிப்பாக சுயஉதவிக் குழுக்களில் அங்கம் வகிக்கும் மகளிர் முன்வரவேண்டும் என்னும் அடிப்படையில், காய்கறி பயிர்களின் சாகுபடி குறிப்புகள் குறித்து இந்நூலில் தனித்தனியே மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள், தங்கள் இருப்பிடத்திலோ, வீட்டுக்கு அண்மையிலோ வீட்டுத்தோட்டம் அமைத்து காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்து பயன்பெறலாம். வீட்டுத் தோட்ட காய்கறிகளைப் பயிர்செய்ய, தக்க உதவிகளை வேளாண்துறை அலுவலர்கள் மூலம் பெறலாம்.

ஒவ்வொரு கிராமத்திலுள்ள மகளிரும் ஓய்வு நேரத்தை இவ்வகை பயனுறு பணியில் செலவிட்டு வீட்டையும், நாட்டையும் மேம்பாடு அடையச் செய்திட வாரீர்!

அன்புடன்,

எஸ்.பி. சற்குண

**எஸ். பி. சற்குணபாண்டியன்**

சமூகநலத்துறை அமைச்சர்

# வீட்டுத் தோட்டம் -
# காய்கறிப் பயிர்களின் சாகுபடி குறிப்புகள்

## தக்காளி

| | | |
|---|---|---|
| 1. | இரகங்கள் | : கோ.1, கோ.2, கோ.3, பி.கே.எம்.1, பூசாரூபி |
| 2. | மண்வளம் | : நல்ல வடிகால் வசதியுடைய மண்வளம் ஏற்றது. |
| 3. | நடவுப் பருவம் | : மே – ஜூன் நவம்பர்–பிப்ரவரி சிறந்த பருவங்களாகும். இருப்பினும் வருடம் முழுவதும் பயிரிடலாம். |
| 4. | விதை அளவு | : ஏக்கருக்கு 160 கிராம் |
| 5. | நடவு முறை | : சுமார் 2 சென்ட் பரப்பில் அமைத்த மேடைப்பாத்தி நாற்றங்காலில் விதை விதைத்து, பின் பார்களில் 25 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை நடவேண்டும். |
| 6. | இடைவெளி | : 75 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைத்து, 60 செ.மீ. இடைவெளியில் செடிகள் நடவு செய்ய வேண்டும். |
| 7. | அடி உயரம் | : கடைசி உழவின்போது, தொழு உரம் ஏக்கருக்கு 10 டன் இடவேண்டும் மற்றும் ஏக்கருக்கு அடியுரமாக யூரியா–66 கிலோ, சூப்பர் பாஸ்பேட்–248 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ்–32 கிலோ, போராக்ஸ் – 4 கிலோ, ஜிங்சல்பேட்–20 கிலோ. |
| 8. | மேலுரமிடுதல் | : ஏக்கருக்கு நடவு செய்த 30ஆம் நாள், 66 கிலோ யூரியா இடவேண்டும். |
| 9. | பின்செய் நேர்த்தி மற்றும் | : மண்ணின் தன்மைக்கேற்ப நீர்ப்பாய்ச்ச வேண்டும். |
| | நீர் பாய்ச்சுதல் | : இறந்த, காய்ந்த செடிகளுக்குப் பதில் புதிய செடிகள் நடவேண்டும். நடவு செய்த 15ஆம் நாள் மற்றும் மாதம் ஒருமுறை களை எடுக்க வேண்டும். |
| 10. | அறுவடை | : நட்ட 60 நாளிலிருந்து வாரம் இருமுறை அறுவடை செய்யலாம். |

11. மகசூல் : சாதாரண ரகம் ஏக்கருக்கு 14 டன் மகசூல் – வீரிய ரகம் ஏக்கருக்கு 30 டன்

12. பயிர் பாதுகாப்பு : இலை சுருள் வைரஸ்

ரோகார் [அ] மெட்டாசிஸ்டாக்ஸ் 2 மில்லி மருந்து 1 லிட்டர் தண்ணீர் விகிதத்தில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

காய்ப்புழு

எண்டோசல்பான் 2 மில்லி [அ] கார்பரில் 1 மில்லி மருந்து 2 லிட்டர் தண்ணீர் விகிதத்தில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இலைப்புள்ளி நோய்

டைத்தேன் எம்.45, 2 கிராம், ஒரு லிட்டர் தண்ணீர் விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

நாற்று அழுகல்

நாற்றங்காலில் நாற்று அழுகலைத் தடுக்க 2.5 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்து 1 லிட்டர் தண்ணீர் விகிதத்தில் கலந்து நாற்றின் வேர்ப்பாகம் நன்கு நனையும்படி ஊற்ற வேண்டும்.

13. சிறப்பு தொழில்நுட்பங்கள்:

1. விதைகளுடன் தேவையான அளவு அரிசிக்கஞ்சியை சேர்த்து, பின் 80 கிராம் அசோஸ்பைரில்லத்தை விதைகளின் மேல் தெளித்துக் கலக்கி நிழலில் 30 நிமிடம் உலரவைத்து, பின் நாற்றங்காலில் விதைக்கவும்.

2. டிரைகாண்டினால் 1 கிராம், 100 லிட்டர் தண்ணீர் விகிதத்தில் கலந்து நடவு செய்த 15ஆம் நாள் மற்றும் பூக்கும் பருவத்திலும் தெளித்தால் மகசூல் அதிகரிக்கும்.

## கத்தரி

| | | |
|---|---|---|
| 1. | பருவம் | : மே – அக்டோபர்<br>டிசம்பர் – மே |
| 2. | இரகங்கள் | : கோ.1, எம்.டி.யு.1, அண்ணாமலை, கோ–2, [ஊதா வரிக்காய்] |
| 3. | வயது | : 135 – 160 நாட்கள் |
| 4. | விதையளவு | : 160 கிராம்/ஏக்கர் |
| 5. | நடவு முறை | : சுமார் 2 சென்ட் பரப்புடைய மேட்டுப்பாத்தி நாற்றங்காலில் விதை விதைத்து பின், பார்களில் 40–45 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். |
| 6. | இடைவெளி | : 75 X 60 செ.மீ. |
| 7. | அடி உரம் | : தொழு உரம் 10 டன், யூரியா 44 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 120 கிலோ, மூ.பொட்டாஷ் 32 கிலோ |
| | மேலுரம் | : ஏக்கருக்கு 40 நாட்கள் கழித்து, 44 கிலோ யூரியா 5–10 செ.மீ. தள்ளி இடவேண்டும். |
| 8. | அறுவடை | : நட்ட 60ஆம் நாளில் இருந்து 5 நாட்கள் இடைவெளியில் அறுவடை |
| 9. | மகசூல் | : 11 டன்/ஏக்கர் |
| 10. | பயிர் பாதுகாப்பு | : சாம்பல் கூன் வண்டு, தண்டுப்புழு மற்றும் காய்ப்புழு – நட்ட 15ஆம் நாளில் டெமிக் குருணை இட்டு, பின் 15 நாட்கள் இடைவெளியில் 1 லிட்டர் நீருக்கு, 1.5 மில்லி எண்டோசல்பான் [அ] செவின் 50 சதம் 2 கிராம் 1 லிட்டர் நீர் அளவில் மாறி மாறி தெளிக்கவும். |
| 11. | சிறப்புத் தொழில் நுட்பங்கள் | : நட்ட 15ஆம் நாளும் மற்றும் பூத்துள்ள தருணத்தில் ஒருமுறை டிரைகாண்டினால் 2 பி.பி.எம். + போரான் 4 பி.பி.எம். தெளித்து மகசூலை அதிகரிக்கலாம். |

# வெண்டை

| | | |
|---|---|---|
| 1. | பருவம் | : ஜூன் – ஆகஸ்ட்<br>மார்ச் – மே |
| 2. | இரகங்கள் | : பூசா சவானி, பர்பானி கிராந்தி, கோ.3 |
| 3. | வயது | : 100 நாட்கள் |
| 4. | விதையளவு | : 3.5 கிலோ/ஏக்கர் |
| 5. | நடவு முறை | : பார்களின் பக்கவாட்டில் நேரிடை விதைப்பு<br>2 விதைகள் – குழிக்கு |
| 6. | இடைவெளி | : 45 X 30 செ.மீ. |
| 7. | அடி உரம் | : 1 ஏக்கருக்கு தொழு உரம் 10 டன், யூரியா 18 கிலோ<br>சூப்பர் பாஸ்பேட்–120 கிலோ,<br>மூ.பொட்டாஷ்–32 கிலோ/ஏக்கருக்கு |
| | மேலுரம் | : ஏக்கருக்கு நட்ட 30ஆம் நாள் 18 கிலோ யூரியா<br>செடியை விட்டு 10 செ.மீ. தள்ளி இடவும் |
| 8. | அறுவடை | : 45ஆவது நாளிலிருந்து ஒரு நாள் விட்டு ஒருநாள்<br>அறுவடை |
| 9. | மகசூல் | : 4–6 டன்/ஏக்கர் |
| 10. | பயிர் பாதுகாப்பு | : சாறு உறிஞ்சும் பூச்சிகள்<br>விதைத்த 15 நாட்கள் கழித்து,<br>பியூரடான்–3ஜி–4.8 கிலோ இடவும்<br><br>காய்ப்புழு<br>எண்டோசல்பான் 35/சி.1 லிட்டர் நீருக்கு 15 மில்லி<br><br>சாம்பல் நோய்<br>நனையும் கந்தகம் 2 கிலோ 1 லிட்டர் நீர் வீதம்<br><br>மஞ்சள் நரம்பு நோய்<br>குளோரிபைரிபாஸ் 2.5 மில்லி வேப்பெண்ணை 2 மி.லிட். |

11. சிறப்புத் தொழில் நுட்பங்கள் : அரிசிக் கஞ்சியை விதையுடன் சேர்த்து நன்கு கலக்கி விட்டபின், 80 கிராம் அசோஸ்பைரில்லத்தைத் தூவி நிழலில் 30 நிமிடம் காயவைக்க வேண்டும். இதனால் 10 கிலோ யூரியா சேமிப்பு செய்யலாம்.

## மிளகாய்

1. பருவம் : மே – ஜுன் மற்றும் டிசம்பர் – ஜனவரி

2. இரகங்கள் : கே.1, கே.2, கோ.1, கோ.2, கோ.3 [குண்டு ரகம்]

3. வயது : 160 நாட்கள்

4. விதையளவு : 0.5 கிலோ/ஏக்கர்

5. நடவு முறை : 1.5 சென்ட் பரப்பில் மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைத்து, 40–45 நாட்கள் வயதுடைய நாற்றுகள். குத்துக்கு 2 நாற்றுகள் நடவேண்டும்.

6. இடைவெளி : 60 X 30 செ.மீ. அல்லது 45 X 30 செ.மீ.

7. அடி உரம் : தொழுஉரம் 10 டன், யூரியா 28 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 150 கிலோ, மூ.பொட்டாஷ் 20 கிலோ/ஏக்கருக்கு

   மேலுரம் : 30–60–90ஆம் நாளில் 25 கிலோ யூரியா/ஏக்கருக்கு

8. அறுவடை : ஒவ்வொரு முறையும் நட்ட 75ஆம் நாளிலிருந்து பச்சைக் காய்களைப் பறிக்கலாம்.

9. மகசூல் : பச்சைக் காய் 4 டன், வரமிளகாய்–0.7–0.9 டன்/ஏக்கர்

10. பயிர் பாதுகாப்பு : சாறு உறிஞ்சும் பூச்சிகள்

    நூற்புழு கட்டுப்பாடு : நட்ட 15ஆம் நாள் 4.8 கிலோ பியூரடான்/ஏக்கர். பின், ரோகார் 1 லிட்டர் நீருக்கு 2 மில்லி வீதம் 25 நாட்கள் இடைவெளியில் தெளித்தல்.

    சாம்பல் நோய் : நனையும் கந்தகம் 2 கிராம்/1 லிட்டர் நீர்

காய் அழுகல் நோய் : டைத்தேன் எம்.45-1 லிட்டர் நீருக்கு 2 கிராம் வீதம்

11. சிறப்புத் தொழில்நுட்பங்கள் : நட்ட 20ஆம், 40ஆம்/60ஆம் மற்றும் 80ஆம் நாளில் 10 லிட்டர் நீருக்கு 25 மில்லி டிரைகாண்டினால் [விபுல்] கைத்தெளிப்பானால் தெளிக்கவும்.

இதனால் 200 கிலோ காய்ந்த மிளகாய் மகசூலை அதிகரிக்கலாம். பூ மற்றும் காய் உதிரலைத் தடுக்க 4.5 லிட்டர் நீருக்கு 1 மில்லி பிளானோபிக்ஸ் பயிர் ஊக்கியைத் தெளிக்கவும்.

## புடல்

1. பருவம் : ஜூன் – ஜூலை
   டிசம்பர் – ஜனவரி

2. இரகங்கள் : கோ.1, பி. கே.எம்.1, கோ.2 [குட்டை இரகம்]

3. வயது : 130-140 நாட்கள்

4. விதையளவு : 0.600 கிலோ/ஏக்கர்

5. நடவுமுறை : விதைகளை 2 கிராம் திரம் மருந்துடன் கலந்து குழிக்கு 5 வீதம் இட்டு முளைத்தவுடன் குழிக்கு 2 நாற்றுகள் விட வேண்டும்.

6. இடைவெளி : 2.5 x 2.0 மீ.
   60 செ.மீ. அகலம் உள்ள கால்வாய்களை 2.5 மீ. இடைவெளியில் எடுக்க வேண்டும் கால்வாயில் 45 செ.மீ. கன அளவுள்ள குழி 2 மீ இடைவெளியில் எடுக்க வேண்டும்.

7. அடி உரம் : தொழு உரம் 10 கிலோ [குழிக்கு]
   6:12:12 காய்கறி உரம் 100 கிராம் [குழிக்கு]

   மேலுரம் : நட்ட 30ஆம் நாள் 25 கிராம் யூரியா [குழிக்கு]

8. அறுவடை : விதைத்த 80ஆம் நாளில் இருந்து 5-7 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்யலாம்.
   மொத்தம் 6-8 அறுவடை

9. மகசூல் : 7–10 டன்/ஏக்கர்

10. பயிர் பாதுகாப்பு : வண்டு : கார்பரில் 2 கிராம்/1 லிட்டர் நீர்
பழஈ : மாலத்தியான் 1 மில்லி/1 லிட்டர் நீர்

11. சிறப்புத் தொழில்நுட்பங்கள் : மகசூலை அதிகரிக்க விதைத்த 15ஆம் நாளில் 10 லிட்டர் நீருக்கு 25 மில்லி எதிரல் கலந்து தெளிக்க வேண்டும். இதனை மூன்று முறை ஒரு வார இடைவெளியில் தெளிக்கவேண்டும்.

## பாகல்

1. பருவம் : ஜூலை மற்றும் ஜனவரி

2. முக்கிய இரகங்கள் : கோ.1, மதுரை 1, அர்க்கா ஹரிட், பிரியா & பிரீத்தி

3. பயிரின் காலம் : 140–150 நாட்கள்

4. விதையளவு : 1.8 கிலோ/ஏக்கர்

5. நடவு முறை : விதைகளை 2 கிராம் திரம் அல்லது கேப்டான் மருந்துடன் கலந்து, குழிக்கு ஐந்து விதைகள் வீதம் ஊன்ற வேண்டும். விதைகள் முளைத்தவுடன் திடமான 3 செடிகளை வளரவிட்டு மற்றச்செடிகளை நீக்க வேண்டும்.

6. இடைவெளி : 2 x1.5 மீட்டர்

7. உர அளவு : தொழுஉரம் 10 கிலோ/குழிக்கு
அடிஉரம் : 6:12:12 கலப்பு உரம் 100 கிராம்/குழிக்கு

மேலுரம் : 30ஆம் நாள் 10 கிராம் தழைச்சத்து

8. பயிர் பாதுகாப்பு : 1. வண்டுகள், பழ ஈக்கள் மற்றும் வெட்டுப்புழுக்களைக் கட்டுப்படுத்த மேலத்தியான் 50 கி.கி/மில்லி/1 லிட்டர் (அ)

டைமத்தோவெட் 30 கி.கி / 1 மில்லி / 1 லிட்டர் தெளிக்கவேண்டும்

2. அடிச்சாம்பல் நோய் : மான்கோசெப் 2 கிராம் / லிட்டர்

3. சாம்பல் நோய் : கார்பன்டைசிம் 0.5 கிராம் / லிட்டர்

| | | |
|---|---|---|
| 9. அறுவடை | : | விதைத்த 65 நாட்கள் முதல் 5–8 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்யலாம். |
| 10. மகசூல் | : | 6 டன் ஏக்கருக்கு |

## பீர்க்கன்

| | | |
|---|---|---|
| 1. பருவம் | : | மே–செப்டம்பர் மற்றும் ஜனவரி |
| 2. இரகங்கள் | : | கோ.1, கோ–2, பி.கே.எம்.1 |
| 3. வயது | : | 120–130 நாட்கள் |
| 4. விதையளவு | : | 0.6 – 0.8 கிலோ/ ஏக்கர் |
| 5. நடவு முறை | : | விதைகளை 2 கிராம் திரம் மருந்துகள் கலந்து குழிக்கு 5 வீதம் இட்டு முளைத்தவுடன் குழிக்கு 3 நாற்றுகள் விட வேண்டும். |
| 6. இடைவெளி | : | 2.5 x 2.0 மீ. 60 செ.மீ. அகலம் உள்ள கால்வாய்களை 2.5 மீ இடைவெளியில் எடுக்க வேண்டும். கால்வாயில் 45 செ.மீ. கன அளவுள்ள குழி 2ஆம் இடைவெளியில் எடுக்க வேண்டும். |
| 7. அடி உரம் | : | தொழு உரம் 10 கிலோ [குழிக்கு]<br>6:12:12 காய்கறி உரம் 100 கிராம் [குழிக்கு] |
| மேலுரம் | : | 30ஆம் நாள் 100 கிராம் அமோனியம் சல்பேட் [அ] 50 கிராம் யூரியா/குழிக்கு |
| 8. அறுவடை | : | விதைத்த 55–60 நாளில் இருந்து 5–8 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்யலாம் |

| | | |
|---|---|---|
| 9. | மகசூல் | : 6–8 டன்/ஏக்கர் |
| 10. | பயிர் பாதுகாப்பு | : 1. வண்டு : கார்பரில் 2 கிராம் 1 லிட்டர் நீர்<br>2. பழ ஈ : மாலத்தியான் 1 மில்லி லிட்டர் நீர் |
| 11. | சிறப்பு தொழில்நுட்பங்கள் | : மகசூலை அதிகரிக்க விதைத்த 15ஆம் நாளில் 10 லிட்டர் நீருக்கு 2.5 மில்லி எதிரல் தெளிக்கவேண்டும். நான்கு முறை ஒரு வார இடைவெளியில் தெளிக்க வேண்டும். |

## முட்டைக்கோஸ்

| | | |
|---|---|---|
| 1. | பருவம் | : மலைப்பகுதி : ஜனவரி – பிப்ரவரி<br>ஜூலை – ஆகஸ்ட்<br>செப்டம்பர் – அக்டோபர்<br>சமவெளி : ஆகஸ்ட் – நவம்பர் |
| 2. | இரகங்கள் | : கோல்டன் ஏக்கர், பிரைட் ஆப் இண்டியா, இயர்லி ஒண்டர் |
| 3. | வயது | : 120 – 150 நாட்கள் |
| 4. | விதையளவு | : 150 கிராம் / ஏக்கர் |
| 5. | நடவு முறை | : சுமார் 2 சென்ட் பரப்பில் மேடைப்பாத்தி அமைக்க நாற்றாங்காலில் விதைவிதைத்த பின் பார்களில் 30–40 நாள் வயதுடைய நாற்றுகளை நடவேண்டும். |
| 6. | இடைவெளி | : 60 x 40 செ.மீ. |
| 7. | அடி உரம் | : தொழுஉரம் 12 டன், யூரியா 80 கிலோ<br>சூப்பர் பாஸ்பேட் 216 கிலோ<br>மூ.பொட்டாஸ் 58 கிலோ/ஏக்கருக்கு |
| | மேலுரம் | : நட்ட 45 நாளில் 26 கிலோ யூரியா/ஏக்கருக்கு |
| 8. | அறுவடை | : நட்ட 90ஆம் நாளிலிருந்து அறுவடை செய்யலாம் |

9. மகசூல் : 10–12 டன்/ஏக்கர்

10. பயிர் பாதுகாப்பு : அசுவினி : டைமேத்தோவேட் 200 மி.
டைமண்ட் பேக்மாத் : பெரமோன் ட்ராப் 5 எண்
இலைப்புள்ளி நோய் : மேங்கோ செப் 400 கிராம்

## பூக்கோசு

1. பருவம் : மலைப்பகுதி : ஜனவரி – பிப்ரவரி
ஜூலை – ஆகஸ்ட்
செப்டம்பர் – அக்டோபர்
சமவெளி : ஆகஸ்ட் – நவம்பர்

2. இரகங்கள் : மார்வெல், இயர்லி சின்தடிக், பூசாடபோலி

3. வயது : 120–130 நாட்கள்

4. விதையளவு : 150 கிராம்/ஏக்கர்

5. நடவுமுறை : சுமார் 2 செண்ட் பரப்பில் மேடைப்பாத்தி அமைக்க நாற்றங்காலில் விதை விதைத்தபின் பார்களில் 30–40 நாள் வயதுடைய நாற்றுகளை நடவேண்டும்

6. இடைவெளி : 60 x 45 செ.மீ.

7. அடிஉரம் : தொழு உரம் 12 டன், யூரியா 80 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 216 கிலோ

மேலுரம் : நட்ட 45 நாளில் 26 கிலோ யூரியா/ஏக்கருக்கு

8. அறுவடை : நட்ட 85ஆம் நாளிலிருந்து அறுவடை செய்யலாம்

9. மகசூல் : 10–12 டன்/ஏக்கர்

10. பயிர் பாதுகாப்பு : அசுவினி : டைமெத்தோவேட் 200 மில்லி
டைமண்ட் பேக்மாத் : பெரமோன் ட்ராப் 5 எண்.
இலைப்புள்ளி நோய் : மேங்கோ செப் 400 கிராம்

## காரட்

1. பருவம் : மலைப்பகுதி : ஜுலை – பிப்ரவரி
சமவெளி : ஆகஸ்ட் – செப்டம்பர்

2. இரகங்கள் : ஊட்டி 1, இந்தியா கோல்ட், பூசாகேசர்

3. வயது : 100–120 நாட்கள்

4. விதையளவு : 2 கிலோ / ஏக்கர்

5. நடவுமுறை : பார்களின் பக்கவாட்டில் நேரடி விதைப்பு
2 விதை குழிக்கு

6. இடைவெளி : 30 x 30 செ.மீ.

7. அடி உரம் : தொழுஉரம் 12 டன், யூரியா 80 கிலோ
சூப்பர் பாஸ்பேட் 216 கிலோ,
மூ. பொட்டாஸ் 65 கிலோ/ஏக்கருக்கு
ஜிங்சல்பேட் 40 கிலோ/ஏக்கருக்கு

மேலுரம் : நட்ட 45 நாளில் 40 கிலோ யூரியா/ஏக்கருக்கு
சூப்பர் பாஸ்பேட் 108 கிலோ

8. அறுவடை : நட்ட 90ஆம் நாளிலிருந்து அறுவடை செய்யலாம்

9. மகசூல் : 10–12 டன்/ஏக்கர்

10. பயிர் பாதுகாப்பு : இலைப்புள்ளி நோய் : மேங்கோ செப் 400 கிராம்

## பீட்ரூட்

1. பருவம் : ஜுலை – ஆகஸ்ட்

2. இரகங்கள் : ஊட்டி 1, டெட்ராய்ட் டார்க் ரெட்

3. வயது : 130 நாட்கள்

4. விதையளவு : 2.5 கிலோ/ஏக்கர்

5. நடவு முறை : பார்களின் பக்கவாட்டில் நேரடி விதைப்பு

6. இடைவெளி : 30 x 30 செ.மீ.

7. அடிஉரம் : தொழுஉரம் 8 டன், யூரியா 53 கிலோ, மூ.பொட்டாஸ்-65 கிலோ/ஏக்கருக்கு

மேலுரம் : நட்ட 30 நாளில் 53 கிலோ யூரியா/ஏக்கருக்கு

8. அறுவடை : நட்ட 95ஆம் நாளிலிருந்து அறுவடை செய்யலாம்

9. மகசூல் : 10-12 டன்/ஏக்கர்

10. பயிர் பாதுகாப்பு : வேர் அழுகல் : கார்பன்டீசம் 200 கிராம்
இலைப்புள்ளி நோய் : மேங்கோசெப் 400 கிராம்

## பீன்ஸ்

1. பருவம் : மார்ச் – மே
அக்டோபர் – ஜனவரி

2. இரகங்கள் : செலக்சன் – 9, பிரிமியர்

3. வயது : 90-100 நாட்கள்

4. விதையளவு : ஏக்கருக்கு மலைப்பகுதி – 30 கிலோ, தரைப்பகுதி – 12 கிலோ

5. நடவுமுறை : பார்களின் இரு பக்கங்களிலும் நடவு செய்தல் [அ] பாத்திகளில்

6. இடைவெளி : 45 x 10 செ.மீ.
50 x 30 செ.மீ.

7. அடி உரம் : தொழுஉரம் – 5 டன், யூரியா–80 கிலோ, சூப்பர் பாஸ்பேட்–360 கிலோ ஏக்கருக்கு

| | | |
|---|---|---|
| | மேலுரம் | : |
| 8. | அறுவடை | : முதிர்ந்தவுடன் அறுவடை செய்தல் |
| 9. | மகசூல் | : 2.5 டன் மகசூல்/ஏக்கர் |
| 10. | பயிர் பாதுகாப்பு | : காய் துளைப்பான் :<br>400 மில்லி எண்டோசல்பான் மருந்து 1 ஏக்கருக்கு<br><br>இலைப்புள்ளி நோய் :<br>மேங்கோசெப் 400 கிலோ/ஏக்கர் |

## முள்ளங்கி

| | | |
|---|---|---|
| 1. | பருவம் | : மலைப்பகுதி : மார்ச்<br>சமவெளி : செப்டம்பர் |
| 2. | இரகங்கள் | : நீலகிரி சிவப்பு, வெள்ளை, ஜப்பானீஸ் லாங் |
| 3. | வயது | : 90 நாட்கள் |
| 4. | விதையளவு | : 4 கிலோ/ஏக்கர் |
| 5. | நடவுமுறை | : பார்களின் பக்கவாட்டில் நேரிடை விதைப்பு<br>2 விதை குழிக்கு |
| 6. | இடைவெளி | : 30 x 10 செ.மீ. |
| 7. | அடிஉரம் | : தொழுஉரம் – 10 டன், யூரியா–22 கிலோ,<br>சூப்பர் பாஸ்பேட்–240 கிலோ,<br>மு.பொட்டாஸ்–80 கிலோ/ஏக்கருக்கு |
| 8. | அறுவடை | : நட்ட 80ஆம் நாளிலிருந்து அறுவடை செய்யலாம். |
| 9. | மகசூல் | : 12 டன்/ஏக்கர் |
| 10. | பயிர் பாதுகாப்பு | : அசுவினி : டைமேத்தோவேட் 200 மில்லி<br>துருநோய் : மேங்கோசெப் 400 கிராம் |

## பெல்லாரி வெங்காயம்

| | | |
|---|---|---|
| 1. | பருவம் | : மே-ஜுன் |
| 2. | இரகங்கள் | : பூசாசிவப்பு |
| 3. | வயது | : 140-150 நாட்கள் |
| 4. | விதையளவு | : 3.2 கிலோ |
| 5. | நடவுமுறை | : 5 சென்ட் பரப்புள்ள நிலத்தில் மேடைப் பாத்திகள் அமைத்து, விதைகளை விதைக்கவும், 45-50 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை பார்களில் நடவு செய்ய வேண்டும். |
| 6. | இடைவெளி | : 45 x 10 செ.மீ. |
| 7. | அடிஉரம் | : தொழுஉரம் - 10 டன், 20 கிலோ ஜிங் [அ] பெரஸ்சல்பேட், யூரியா - 66 கிலோ, சூ. பாஸ்பேட்-300 கிலோ, மூ.பொட்டாஷ்-50 கிலோ |
| | மேலுரம் | : நட்ட 30ஆம் நாள் யூரியா 56 கிலோ |
| 8. | அறுவடை | : நட்ட 140 நாளில் அறுவடை |
| 9. | மகசூல் | : 7-8 டன் |
| 10. | பயிர் பாதுகாப்பு | : நுனி கருகல் : ரோகார் [அ] மெடாசிஸ்டாக்ஸ் 1 மில்லி/லிட்டர் நீர் |
| 11. | சிறப்புத் தொழில்நுட்பங்கள் | : ஒரு கிலோ விதைக்கு 100 கிராம் அசோஸ் பைரில்லத்தை சேர்த்து, மேடைப் பாத்திகளில் 1-2 செ.மீ. ஆழத்தில் விதைத்து, பாத்தியின் மேல் காய்ந்த சருகுகளை பரப்பினால் விதைகள் விரைவில் முளைக்கும். சேமிப்புக் கிடங்குகளில் விதைகள் முளைப்பதைத் தடுக்க அறுவடை செய்வதற்கு 15 நாட்கள் முன்பு 1 லிட்டர் நீருக்கு 500 மில்லி கிராம் மேலிக்ஹைட்ரசைடு கலந்து தெளிக்க வேண்டும். |

## இதர காய்கறிகளின்

| வ. எண். 1 | காய்கறியின் வகை 2 | முக்கிய இரகங்கள் 3 | நடவுப் பருவம் 4 | விதையளவு (ஏக்கருக்கு) 5 |
|---|---|---|---|---|
| 1. | செடி முருங்கை | பெரியகுளம் 1 மற்றும் 2 | ஜூலை - அக்டோபர் | 200 கிராம் |
| 2அ. | செடி அவரை | கோ.6 முதல் கோ.13. அர்க்கா ஜெய் & அர்க்கா விஜய் | ஆண்டு முழுவதும் | 10 கிலோ |
| 2ஆ. | கொடி அவரை | கோ.1 முதல் கோ.5 வரை மற்றும் பூசானுர்லி புரோலிபிக் | ஜூலை - ஆகஸ்ட் | 2 கிலோ |
| 3. | கொத்தவரை | பூசாமெசாமி பூசா நவ்பஹார் | பிப்ரவரி- ஜூலை | 4 கிலோ |
| 4. | காய்கறி காராமணி | கோ.2 & வம்பன் 1 | ஜூன் - ஜூலை பிப்ரவரி- மார்ச் | 8 கிலோ |
| 5. | பேபி கார்ன் | கோ.1 | ஆண்டு முழுவதும் | 10 கிலோ |
| 6. | <u>கீரை வகைகள்</u> | | | |
| | முளைக்கீரை தண்டுக்கீரை | கோ.1 கோ.2 & கோ.5 | ஆண்டு முழுவதும் | ஒரு கிலோ |
| | சிறு கீரை | கோ.3 | | |

## கட்டுக்கோப்பு சாகுபடி விவரம் :

| இடை வெளி<br>6 | உர அளவு<br>தழை : சாம்பல் : மணி<br>7 | மகசூல்<br>8 | குறிப்பு<br>9 |
|---|---|---|---|
| 3 மீ. x<br>3 மீ. | 45 : 10 : 30<br>கிராம் /மரம் | 220 காய்கள்/<br>மரம்/வருடம்<br>20 டன்/<br>ஏக்கர் | 75 செ.மீ. வளர்ந்த செடிகளின் நுனிகளை கிள்ளி விடவேண்டும்.<br><br>முதல் அறுவடை முடிந்தவுடன், தரையில் இருந்து 90 செ.மீ.உயரத்தில் மரத்தினை வெட்டி விடவேண்டும். மறுதாம்பு மரங்களை மூன்று வருஷம் வரை பராமரிக்கலாம் |
| 30 செ.மீ.x<br>60 செ.மீ. | 10 கிலோ : 20 கிலோ : -<br>[ஏக்கருக்கு] | 4 டன்/<br>ஏக்கர் | --- |
| 2 மீ. x<br>3 மீ. | 6 : 12 : 12<br>கிராம்/செடி | 5 டன்/<br>ஏக்கர் | --- |
| 45 செ.மீ. x<br>45 செ.மீ. | 20 : 20 : 12.5<br>கிலோ/ஏக்கர் | 3 டன்/<br>ஏக்கர் | --- |
| 45 செ.மீ. x<br>15 செ.மீ. | 10 கி : 10 கி : 20 கி<br>[ஏக்கருக்கு] | 2 டன்/<br>ஏக்கர் | --- |
| 45 செ.மீ.<br>x 25 செ.மீ | 60 கி : 24 கி : 16 கி<br>[ஏக்கருக்கு] | 2640/<br>ஏக்கர் | விதைத்த 40ம் நாள் மகரந்தம் வெளி வருவதற்கு முன் ஆண் பூக்களை நீக்கவேண்டும். |
| 2 x 1.5 மீ.<br>மேடைப்<br>பாத்திகள் | 30கி : 10 கி : - | 4 டன்/ஏக்.<br>6.4 டன்/<br>ஏக்கர்<br>12 டன்/ஏக்கர் | --- |




